2020 மார்ச் 23]

மேலான அனுமதி பெற்று தக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் நேரம் முடிவுற்றது.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 3. விதி 110—ன்கீழ் அறிக்கைகள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கைகள் அளிக்க வேண்டும் என்று அனுமதி கோரியுள்ளார்கள். அனுமதி அளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

### (அ) மதுரை சட்டக் கல்லூரிக்கு புதிய கட்டடம் கட்டுதல் பற்றிய சட்டத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டம் பயிலும் மாணாக்கர்களின் நலன் கருதி, முற்றிலும் பழுதடைந்துள்ள மதுரை அரசு சட்டக் கல்லூரியின் பழைய கட்டடத்திற்குப் பதிலாக, புதிய கட்டடம் கட்டிக் கொடுக்கப்படும் என்பதை மிக்க மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

### (ஆ) குற்ற வழக்குத் தொடர்வுத் துறை மற்றும் சட்டக் கல்வி இயக்குநரகங்களுக்கு புதிய கட்டடம் உள்ளிட்ட உள் (நீதிமன்றங்கள்) துறை தொடர்பான முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உள் (நீதிமன்றங்கள்) துறை குறித்த பின்வரும் அறிவிப்பினை இம்மாமன்றத்தில் வெளியிடுகின்றேன்:

குற்ற வழக்கு தொடர்வுத் துறை மற்றும் சட்டக் கல்வி இயக்குநரகங்களுக்கு அனைத்து வசதிகளுடன்கூடிய ஒருங்கிணைந்த சொந்தக் கட்டடம், 38 கோடி ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## (இ) அங்கன்வாடி மையங்களில் சிறிய கட்டடப் பராமரிப்புப் பணிகள், தளவாடச் சாமான்கள் வாங்குதல், முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு இரண்டு வண்ணச் சீருடைகள் வழங்கும் திட்டத்தை விரிவுபடுத்துதல், சமூக நல ஆணையரகத்திற்கு கட்டடம், புதுக்கோட்டை "அன்னை சத்தியா அரசினர் குழந்தைகள் காப்பகத்திற்கு" கட்டடம் மற்றும் குடியிருப்புகள் கட்டுதல் உள்ளிட்ட சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்டத் துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகிறேன்:

1. 41 ஆயிரத்து 133 அங்கன்வாடி மையங்களில் சிறிய கட்டடப் பராமரிப்புப் பணிகள், தச்சு வேலை, மின் மற்றும் பிளம்பிங் பணிகளை மேற்கொள்ள ஒரு மையத்திற்கு தலா 3 ஆயிரம் ரூபாய் வீதம் மொத்தம் 12 கோடியே 34 இலட்சம் ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11–30

2. சென்ற ஆண்டைப் போலவே நடப்பாண்டிலும், 10,888 அங்கன்வாடி மையங்களுக்கு 10 கோடியே 59 இலட்சம் ரூபாய் செலவில் மேசை, நாற்காலி, இரும்பு அலமாரி போன்ற தளவாடச் சாமான்கள் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. அங்கன்வாடி மையங்களில் முன்பருவக் கல்வி பயிலும் குழந்தைகளுக்கு இரண்டு இணை வண்ணச் சீருடைகள் வழங்கும் திட்டம் தற்போது 17 மாவட்டங்களில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இவ்வாண்டு கிருஷ்ணகிரி, காஞ்சிபுரம், மதுரை, புதுக்கோட்டை, கடலூர், திருவள்ளூர், ஈரோடு மற்றும் தஞ்சாவூர் ஆகிய 8 மாவட்டங்களிலும் 8 கோடியே 47 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில், 3.23 இலட்சம் குழந்தைகள் பயன்பெறும் வகையில் இத்திட்டம் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4. சென்னை, மயிலாப்பூரில் 9 கோடியே 33 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் சமூக நல ஆணையரகத்திற்கு அனைத்து வசதிகளுடன்கூடிய புதிய கட்டடம் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. புதுக்கோட்டை மாவட்டத்தில் இயங்கிவரும் "அன்னை சத்தியா அரசினர் குழந்தைகள் காப்பகத்திற்கு" அனைத்து

உட்கட்டமைப்பு வசதிகளுடன்கூடிய புதிய கட்டடமும், குழந்தைகள் பராமரிக்கும் பொறுப்பில் உள்ள பணியாளர்களுக்கு குடியிருப்பும், 10 கோடியே 23 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கட்டப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

## (ஈ) மாற்றுத் திறனாளிகளுக்கு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கீடு செய்து சிகிச்சை அளித்தல், சேலம், செவித் திறன் குறையுடையோர் உயர்நிலைப் பள்ளிக்கு விடுதியுடன் கட்டடம், பாலியல் வன்கொடுமை மற்றும் இதர குற்றங்களால் பாதிக்கப்படும் மாற்றுத் திறனாளி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு "மாற்றுத் திறனாளி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான இழப்பீடு திட்டம் 2020"-க்கு நிதியம் உருவாக்குதல் உள்ளிட்ட மாற்றுத் திறனாளிகள் நலத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாற்றுத் திறனாளிகள் நலனை உறுதிப்படுத்தும் வகையில், பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. மன வளர்ச்சி குறைபாடு, மூளை முடக்குவாதம், தசைச் சிதைவு நோய், பல்வகைக் குறைபாடு மற்றும் செவித் திறன் குறைபாடு உடைய ஆயிரம் பயனாளிகளுக்கு மாண்புமிகு முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டத்தின்கீழ் தனியே 10 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்து சிகிச்சை அளிக்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. சேலம் மாவட்டத்தில் தற்போது வாடகைக் கட்டடத்தில் இயங்கிவரும் செவித்திறன் குறையுடையோருக்கான அரசு உயர்நிலைப் பள்ளிக்கு மாண்புமிகு அம்மாவின் அரசு, கொண்டப்பநாயக்கன்பட்டி கிராமத்தில் 1.31 ஏக்கர் நிலம் வழங்கி, 6.70 கோடி ரூபாய் மதிப்பீட்டில் விடுதி வசதியுடன்கூடிய சொந்தக் கட்டடம் கட்டித் தரும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. பாலியல் வன்கொடுமை மற்றும் இதர குற்றங்களால் பாதிக்கப்பட்டு, வாழ்ந்துவரும் மாற்றுத் திறனாளி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கு விரைந்து இழப்பீடு வழங்கிட ஏதுவாக, "மாற்றுத் திறனாளி பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான இழப்பீடு திட்டம்–2020"–க்கான நிதியம், 5 கோடி ரூபாய் வைப்பீட்டுடன் உருவாக்கப்படும் என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

[2020 மார்ச் 23

**(உ) சிறுபான்மையினருக்கான கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்புத் திட்டங்கள் செயல்படுத்துதல், பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கான மாதாந்திர மற்றும் சிறப்பு உணவுக் கட்டணம் உயர்த்தி வழங்குதல், பிறமலைக் கள்ளர் பள்ளிகளில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளுதல், பள்ளி விடுதிகளை நிலை உயர்த்துதல் தொடர்பான பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை குறித்த முதலமைச்சரின் அறிக்கை**

**மாண்புமிகு திரு. எடப்பாடி கே. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறையின் சார்பாக பின்வரும் அறிவிப்புகளை வெளியிடுகின்றேன்:

1. சிறுபான்மையினர் அதிகமாக வாழும் கூடலூர், மணமேல்குடி, திருவாடனை மற்றும் மண்டபம் ஆகிய 4 வட்டாரங்களிலும், வேலூர், பேரணாம்பட்டு, மேல்விஷாரம், ஆம்பூர், வாணியம்பாடி, திண்டுக்கல், பள்ளப்பட்டி, நாகப்பட்டினம், கீழக்கரை, தூத்துக்குடி, காயல்பட்டினம், கடையநல்லூர், தென்காசி, திருநெல்வேலி, கொல்லங்கோடு, நாகர்கோவில், குறிச்சி மற்றும் குனியமுத்தூர் ஆகிய 18 பகுதிகளிலும், சமுதாயக்கூடம் அமைத்தல், நவீன வசதிகளுடன்கூடிய வகுப்பறை கட்டுதல், புதிய அரசு மேல்நிலைப் பள்ளிகள் கட்டுதல், தொழிற்பயிற்சி நிலையம் அமைத்தல், வேலைக்குச் செல்லும் மகளிருக்கான விடுதிகள் கட்டுதல், மதரசா பள்ளிகளுக்கு இணைய வசதியுடன்கூடிய கணினிகள் வழங்குதல் போன்ற சிறுபான்மையினருக்கான கல்வி, சுகாதாரம் மற்றும் திறன் வளர்ப்புத் திட்டங்கள் 24.25 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செயல்படுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

2. இத்துறையின்கீழ் இயங்கிவரும் 1,301 விடுதிகளுக்கு DTH இணைப்புடன் LED தொலைக்காட்சிப் பெட்டிகள், 5 கோடியே 39 ஆயிரம் ரூபாய் மதிப்பீட்டில் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

3. இத்துறையின் பள்ளி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கான மாதாந்திர உணவுக் கட்டணம் 900 ரூபாயிலிருந்து 1,000 ரூபாயாகவும், (மேசையைத் தட்டும் ஒலி) கல்லூரி விடுதிகளில் தங்கிப் பயிலும் மாணாக்கர்களுக்கான

மாதாந்திர உணவுக் கட்டணம் 1,000 ரூபாயிலிருந்து 1,100 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

இதுதவிர, பொங்கல், குடியரசு தினம், தமிழ் வருடப்பிறப்பு, சுதந்திர தினம் மற்றும் தீபாவளி ஆகிய பண்டிகை நாட்களில் சிறப்பு உணவுக் கட்டணமாக தற்போது பள்ளி மாணாக்கர்களுக்கு வழங்கப்பட்டுவரும் தொகை 20 ரூபாயிலிருந்து 40 ரூபாயாகவும், கல்லூரி மாணாக்கர்களுக்கு 40 ரூபாயிலிருந்து 80 ரூபாயாகவும் உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

4, மதுரை, தேனி மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள பிறமலைக் கள்ளர் பள்ளிகளில் பழுதுபார்ப்பு மற்றும் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள 5 கோடி ரூபாய் வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

5. இத்துறையின்கீழ் இயங்கிவரும் 1,354 விடுதிகளில், 1,290 விடுதிகள் சொந்தக் கட்டடங்களில் இயங்கி வருகின்றன. இக்கட்டடங்களில் பழுதுபார்ப்புப் பணிகளை மேற்கொள்வதற்காக மாண்புமிகு அம்மாவின் அரசு 9 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்யும். (மேசையைத் தட்டும் ஒலி)

6. இத்துறையின்கீழ் இயங்கிவரும் 1,099 பள்ளி விடுதிகளில், 11 பள்ளி விடுதிகள் ஒரு கோடியே 98 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் கல்லூரி விடுதிகளாக நிலை உயர்த்தப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 4. சட்டத் துறை, உள் (நீதிமன்றங்கள்) துறை, சமூக நலத் துறை, மாற்றுத் திறனாளிகள் நலத் துறை மற்றும் பிற்படுத்தப்பட்டோர், மிகப் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை தொடர்பான முதலமைச்சரின் அறிவிப்புகளுக்கு நன்றி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.வி. சண்முகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு தமிழகத்தினுடைய முதலமைச்சர் அவர்கள் சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறைக்கு பல்வேறு அறிவிப்புகளை வெளியிட்டுள்ளார். அந்தத் துறையினுடைய